**செய்தி வெளியீடு** **நாள் : 12.7.2023**

**சென்னைத் தீவுத்திடலில் 30 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் நவீன நகர்ப்புர வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாக மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்களும், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.கா.இராமச்சந்திரன் அவர்களும் நேரில் ஆய்வு.**

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி**, 2023-2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை செயல்படுத்தும் வகையில் இன்று (12.7.2023) சென்னைத் தீவுத்திடலில் 30 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் இயற்கை வனப்புடன் நகர்ப்புர பொதுச் சதுக்கம், கண்காட்சி அரங்குகள், திறந்தவெளி திரையரங்கம், உணவகங்கள் போன்ற நவீன நகர்ப்புர வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாக மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் மற்றும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.கா.இராமச்சந்திரன் அவர்கள் ஆகியோர் நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டனர்.

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** வழிகாட்டுதலின்படி இன்று (12.7.2023) சென்னைத் தீவுத்திடலில் 30 ஏக்கர் நிலப்பரப்பில் அமைய இருக்கின்ற இயற்கை வனப்புடன் நகர்ப்புர பொதுச் சதுக்கம், கண்காட்சி அரங்குகள், திறந்தவெளி திரையரங்கம், உணவகங்கள் போன்ற நவீன நகர்ப்புர வசதிகளை ஏற்படுத்திட மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.கா.இராமச்சந்திரன் அவர்களுடன் அமையவிருக்கின்ற சென்னைத் தீவுத்திடலில் இயற்கை வனப்புடன் நகர்ப்புர பொதுச் சதுக்கம்

அமைக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கிறது என்பதை ஆராய்ந்து, இதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு இறுதி வடிவம் கொடுத்தப்பிறகு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து, அதன் பின்னர் ஒப்பந்தப்புள்ளிக் கோரப்பட்டு இந்த பணிகளை துவங்குவதற்குண்டான முயற்சியின் ஒரு பகுதியாகத்தான் இன்றைக்கு இந்தப் பகுதியை ஆய்வு செய்திருக்கின்றோம்.

சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் உரிய காலத்திற்குள் செயல்பாட்டுக்கு வரவேண்டுமென்று **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** இதுபோன்ற பெருந்திட்டங்களை இரண்டு மாதத்திற்கு ஒருமுறை சம்மந்தப்பட்ட அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள் மற்றும் ஆணையாளர்கள் ஆகியோர்களை உள்ளடக்கிய ஆலோசனைக் கூட்டங்களை தொடர்ந்து நடத்தி வருவதால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ளுகின்ற அந்த ஆலோசனைக் கூட்டத்தின் வாயிலாக இன்றைக்கு தொடர் நடவடிக்கையாக இரண்டு மாதத்திற்கு ஒருமுறை நடைபெற்ற பணிகளுடைய முன்னேற்றங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு செல்லவேண்டுமென்ற சூழலில் இந்தப் பணிகள் தற்போது விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. வெகுவிரைவில் இந்த பணிகளை மேற்கொள்வதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளையும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமும், சுற்றுலாத்துறையும் இணைந்து இந்த பணிகளை மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

சென்னைத் தீவுத்திடலில் மொத்தமிருக்கின்ற 30 ஏக்கர் நிலப்பரப்பானது கூவமாற்றின் ஒரு பக்கம் 18 ஏக்கர் நிலப்பரப்புடனும் மற்றொரு பக்கம் 12 ஏக்கர் நிலப்பரப்பையும் கொண்டுள்ளதால் அதனைக் கருத்தில் கொண்டு அதற்கேற்றாற்போல் இப்பகுதியில் உலகத்தரத்தில் அமைக்கப்பட இருக்கின்ற கண்காட்சிகள், பொழுதுபோக்கு அம்சங்கள், தங்கும் விடுதிகள், சுற்றுலா வருபவர்களை கவரும் வகையிலும் சென்னையில் வசிப்பவர்களுக்கு பொழுதுபோக்கு அம்சங்களுடனும் இத்திட்டம் நிறைவேற்றப்பட இருப்பதால் இப்பணிகள் முழுமை பெற்றப்பிறகு பெருமளவில் சென்னை மாநகர

மக்களுக்கும், வெளி மாநில, மாவட்ட சுற்றுலா பயணிகளுக்கும் பயன்படுகின்ற வகையில் இந்த பகுதி அமையும் என தெரிவித்துக்கொண்டு, வடசென்னையை **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** ரூ.1000கோடி மதிப்பீட்டில் மூன்று ஆண்டுகளில் மேம்படுத்தப்படும் என்று குறிப்பிட்டுருந்தார். ஆகவே, இந்த திட்டமும் வடசென்னையினுடைய முன்னேற்த்தின் ஒரு பகுதியாக எடுத்துக்கொள்ளப்பட்டு அனைவருக்கும் பயன்பெறக்கூடிய ஒரு சிறந்த பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய ஒரு அரங்கமாக இதை ஏற்படுத்த திட்டமிட்டிருக்கின்றோம். இறுதி வடிவத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இறுதி செய்வார்கள். இவ்வாறு **மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன் இ.ஆ.ப., அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சூல் மிஸ்ரா இ.ஆ.ப., அவர்கள், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள், சி.எம்.டி.ஏ முதன்மை செயல் அலுவலர் திருமதி. கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள், சுற்றுலாத்துறை, வருவாய்த் துறை மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.